சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-06

ந.க.எண்.6482/ஆ3/2022, நாள். 15.09.2022

பொருள்: பள்ளிக் கல்வி - குறை தீர்க்கும் கூட்டம் - அரசு உதவி பெறும் பள்ளிகள் - சென்னை மாவட்டம் - அரசு உதவி பெறும் / ஆங்கிலோ இந்தியன் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் - ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் குறை தீர்க்கும் நாள் வருவாய் மாவட்ட அளவில் நடைபெறுதல் - தொடர்பாக.

--------

சென்னை மாவட்டத்தில் செயல்படும் அரசு உதவிபெறும் / ஆங்கிலோ இந்தியன் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களது தேர்வுநிலை, சிறப்புநிலை, ஊதிய உயர்வு மற்றும் நியமன ஒப்புதல் சார்ந்து நிலுவையில் உள்ள கோப்புகள் தொடர்பாக குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருவாய் மாவட்ட அளவில் 19.09.2022 **(திங்கட் கிழமை) அன்று காலை** 10.00 **மணி** முதல் மாலை 5.00 **மணி** வரை **சென்னை முதன்மைக் கல்வி அலுவலகத்தில்** நடைபெறவுள்ளது.

அதுசமயம் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் மேற்காண் கோரிக்கைகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் விவரத்தினை நேரில் தெரிவித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அதனை தொடர்ந்து பள்ளி நிர்வாகமும் தங்கள் பள்ளி சார்பாக நிலுவையில் உள்ள கோப்புகளுக்குரிய ஆதார ஆவணங்களுடன் நேரில் கலந்துகொள்ளவும் பள்ளிச் செயலர் / தாளாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மேலும் தங்கள் பள்ளி சார்பாக மேற்காண் பொருள் சார்ந்த கோரிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனில் அவ்விவரத்தினை தெரிவிக்கவும் அனைத்து அரசு உதவிபெறும் / ஆங்கிலோ இந்தியன் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி செயலர் / தாளாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

தங்கள் கல்வி மாவட்ட பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் குறை தீர்க்கும் நாளன்று சென்னை முதன்மைக்கல்வி அலுவலகத்தில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு பள்ளி செயலர் / தாளாளர்களுக்கு தெரிவிக்க அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
15/9/2022 சென்னை.

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. செயலர் / தாளாளர்,
   அனைத்து அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும்மேல்நிலைப் பள்ளி, சென்னை மாவட்டம்.
   **(மாவட்டக் கல்வி அலுவலர் வாயிலாக)**
3. தலைமையாசிரியர்கள்,
   (தங்கள் பள்ளியில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இவ்விவரத்தினை தெரிவித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)

நகல்

சென்னை-06, பள்ளிக் கல்வி ஆணையருக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.